[1969 செப்டம்பர் 13

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசினர் துறையில் ஐந்து பள்ளிகளும், தனியார் துறையில் இரண்டு பள்ளிகளும் திறக்கப் படுவதாக முடிவு செய்யப்பட்டது. பின்னர் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் திருத்தப்பட்ட வகையில், அரசினர் சார்பாக தொழில் நுட்பப் பள்ளி எதுவும் திறக்கப்பட வேண்டாம் என்றும், ஆனால் தனியார் துறையில் யாராவது தொழில் நுட்பப் பள்ளியைத் திறக்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு உதவியளிக்கலாம் என்றும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கிற 35 தொழில் நுட்பப் பள்ளிகளில் சேர வேண்டிய அளவிற்கு மாணவர்கள் வந்து சேரவில்லை. முன்பு இருந்த கவர்ச்சி இப்போது இல்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மேற் கொண்டதற்குப் பிறகு நாட்டிலே தொழில் அறிவு பெற்றவர் களுடைய தேவை ஏற்படலாம். தனியார் துறையில் இரண்டு தொழில் நுட்பப் பள்ளிகளைத் திறக்க யாராவது முன்வந்தால் அவர்களுக்கு உதவியளிக்க அரசு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. போன்ற தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை யில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உரிய காலத்தில் துவக்காததன் காரணமாக, இரண்டு மூன்று ஆண்டுகளில் பல்வேறு முயற்சிகள் தேங்கியிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்த பிறகு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படலாம். அரசாங்கம் எந்தத் திட்டத்தையாவது தீட்டி ஒரு சில மாதங்களிலே அவர்களுடைய பிரச்சினைகள் அத்தனையையும் போக்குவதற்கான வழிவகைகள் இல்லை. ஐ.டி.ஐ.-யில் பயிற்சி பெற்றவர்களுக்கு வருங்காலத்தில் வேலைவாய்ப்பு இருக்கிறது. பாலிடெக்னிக், என்ஜினியரிங் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு இந்தக் குறை தீர்க்கப்படும்.

Medical facilities for Kalpakkam Atomic Plant Area

* 274. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether medical facilities have been provided at the Kalpakkam Atomic Plant area?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையப் பகுதி குடியிருப்புகளில் இருப்பவர் களுக்கு வைத்திய உதவியளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின்நிலையம் குடியிருப்புப் பகுதியில் மருந்தகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அணுமின் நிலைய நிறுவனத்தின் சார்பில் 8—5—1969-லிருந்து அசிஸ்டன்ட் சர்ஜன் ஒருவர் அங்கு இருந்து பணியாற்றுகிறார். இந்திய அரசு இதைப் பேணி வருகிறது. அசிஸ்டண்ட் சர்ஜன் அவர்கள் அப் பகுதியில் பணியாற்றி வருகிறார்.

Doctors in Municipal Service.

* 275. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any request has been made by the Annual Conference of the Indian Medical Practitioners Association in September, 1968 to give Gazetted rank to the Doctors in Municipal Service?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Fire accident at Kosapet

* 276. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether a fire accident took place in Kosapet at Mooku Chetty Street (Division 48) on 15th July 1968;

(b) if so, the estimated loss of property; and

(c) the nature of assistance given to the affected families?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ரூ. 18,300.

(உ) தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் 1968 ஜூலை 15, 16, 17 தேதிகளில் மூன்று தினங்களுக்கு அளிக்கப்பட்டன.

DR. H. V. HANDE : Sir, a number of persons are doll-makers and they have also lost doll-moulds and other raw materials which are necessary to manufacture dolls. As the cost of these materials is very little, will the Government consider their question a little more sympathetically and see that whatever assistance they propose to give, is given quickly if necessary in consultation with the Department of Industries?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am most sorry that I could not comply with the request of the Hon. Member, Dr. Hande, because the collector of Madras has reported that the accident was suspected to be not accidental. The Collector also further says that according to the instructions of the Board of Revenue, in cases where there is a little suspicion that it is not accidental, no financial assistance should be granted. That is why no assistance was granted.